**OS. 46/2023**

**நாள். 13.11.2025**

**பி.வா.சா.1 – கலா, க/பெ.வேலுச்சாமி**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்துக்கள் நாகசௌந்தரம் அம்மாளுக்கு அவரது கணவர் வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். நாகசௌந்தரம்மாள் தாவா சொத்துக்கள் அனைத்தையும் 08.12.1941 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் குப்புச்சாமி சேர்வை என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். குப்புச்சாமி சேர்வையின் மனைவி காமாட்சி அம்மாள் என்றால் சரிதான். குப்புச்சாமி சேர்வை அந்த சொத்துக்களை காமாட்சி அம்மாளுக்கு 23.11.1943 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். குப்புச்சாமி சேர்வை வேறுஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததால், அவரது மனைவிக்கு ஆதரவாகவேண்டும் என்பதால் ஊர்க்காரர்கள் மற்றும் உறவினர்கள் பஞ்சாயத்துசெய்து முடிவு செய்ததின்படி மனைவி பெயரில் கிரைய ஆவணமாக சொத்துக்களை பாத்தியப்படுத்தினார் என்றால் குப்புச்சாமி சேர்வை வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை, ஆனால் கிரையம் கொடுத்தது உண்மை. காமாட்சி அம்மாள் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் எந்த சூழ்நிலையில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனக்கு தற்போது வயது 50. நான் பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பே காமாட்சி அம்மாள் பெயரில் கிரையம் எழுதப்பட்டது, அதனால் அந்த கிரைய பத்திரம் எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது என்பது தெரியும் என்றால் அது தவறு. குப்புச்சாமி சேர்வை எப்போது இறந்தார் என்றால் தெரியாது. அவரை நான் பார்த்தது இல்லை என்றால் சரியல்ல, சிறுவயதில் பார்த்துள்ளேன், எத்தனை வயதில் பார்த்தேன் என்றால் சொல்ல முடியாது. காமாட்சி அம்மாளுக்கு பூமயில், வேலுச்சாமி என இருமக்கள் என்றால் சரிதான். குப்புச்சாமிசேர்வையின் நடவடிக்கையால் காமாட்சி அம்மாள் மனரீதியாக

பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. காமாட்சி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தனது மகளுக்கும், மகனுக்கு ஒரு உயில் கொடுத்தார் என்றால் மகளுக்குத்தான் எழுதிக்கொடுத்தார், மகனுக்கு எழுதிக்கொடுக்கவில்லை. காமாட்சி அம்மாள் 02.08.1952 தேதியிட்ட ஆவண எண்.10/1952ல் கண்ட உயில் சாசனம் ஒன்றை அவரது மகளான பூமயிலும், மகனான வேலுச்சாமியும் சொத்துக்களை அடையும் வகையில் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. பூமயிலுக்கு 2 முதல் 6 பிரதிவாதிகளும், மாரிமுத்து மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். மாரிமுத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது மனைவி 7ம் பிரதிவாதி சந்திரா என்றால் சரிதான். மக்கள் 8 மற்றும் 9 பிரதிவாதிகளான விஜி மற்றும் கவிதா என்றால் சரிதான். அதேபோல் மூர்த்தி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது மனைவிதான் 10ம் பிரதிவாதி செல்வி என்றால் சரிதான். அவரது மகள் 11ம் பிரதிவாதி திவ்யா என்றால் சரிதான். வேலுசசாமியின் மனைவி இவ்வழக்கில் 1ம் வாதியான காமாட்சி அம்மாள் என்றால் சரிதான். அவரது மக்கள் 2ம் வாதி ரமேசும், 1ம் பிரதிவாதி லதாவும் என்றால் சரியல்ல. 1ம் வாதி காமாட்சி அம்மாளின் மக்கள் யார் என்றால் 2ம் வாதி ரமேசும், 1ம் பிரதிவாதி லதாவும். வேலுச்சாமி காமாட்சி அம்மாளை விவாகரத்து செய்தார் என்பதற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் தெரியாது. விவாகரத்து பற்றி எனது எதிர்வழக்குரையில்தேதி, எந்த நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்யப்பட்டு பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வேலுச்சாமி அவரது மனைவியான 1ம் வாதி காமாட்சி அம்மாளை எந்த காலத்திலும் விவாகரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களிலும் வேலுச்சாமி அவரது மனைவியான காமாட்சி அம்மாளை விவாகரத்து செய்ததாக சரத்துக்கள் இல்லை என்றால் சரிதான். என்னை வேலுச்சாமி திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் வேலுச்சாமிக்கும் திருமணம் நடைபெற்றது என்பதற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை, எல்லோரும் சேர்ந்துதான் திருமணம் செய்து

வைத்தார்கள். என்னுடைய எதிர்வழக்குரையில் எந்த தேதியில், எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், இராமேஸ்வரம் பத்திரகாளியம்மன் கோவிலில் வைத்த திருமணம் நடைபெற்றது. இராமேஸ்வரம் பத்திரகாளியம்மன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றிருந்தால் திருமணம் நடைபெற்றதற்கான ரசீது கொடுத்திருப்பார்கள் என்றால் அப்போதெல்லாம் கொடுப்பதில்லை. அந்த கோவிலில் எப்போது இருந்து திருமணத்திற்கான ரசீது கொடுக்கிறார்கள் என்றால் தெரியாது. நான் வேலுச்சாமி என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல. எனது மக்களான 13, 14 பிரதிவாதிகள் வேலுச்சாமிக்கு Illegitimate குழந்தைகள் என்றால் சரியல்ல. காமாட்சி அம்மாள் 1995ம் ஆண்டு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். காமாட்சி அம்மாள் 1995ம் ஆண்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தில் என்னை என் மகனும், அவனது மனைவியும் கவனிக்காமல் அனாதைபோல் ஆக்கி என்னை தனிமைப்படுத்திவிட்டார்கள், நான் தனிமைப்பட்டு நோய்நொடியினால் அவதிப்பட்டு வந்தபோது என்னை என் மகள் பூமயிலும், என் தாயார் பாப்பாத்தி அம்மாளின் சகோதரி அம்மாளம்மாளுடைய குமாரர் ராசு சேர்வையின் 5வது குழந்தையும் எனது மருமகளுமான கலா என்பவரும் சவரட்சனை செய்து வருகிறார்கள் என வாசகங்கள் கூறி எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள கலா யார் என்றால் நான்தான். அந்த உயிலில் வேலுச்சாமியின் மனைவி என என்னை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த உயிலில் நான் நோய்வாய்பட்டபோது என் கழிவுகளை சுத்தம் செய்து எனக்கு சேவை செய்தார்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 உயில் எழுதப்பட்ட காலத்திற்கு வெகுநாட்களுக்கு முன்பாகவே காமாட்சி அம்மாள் உடல்நலம் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையாக படுக்கையிலேயே சிறுநீர், மலம் கழித்து கஷ்டப்பட்டு நடமாட்டம் இல்லாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 உயில் சாசனம் காமாட்சி அம்மாள்

எழுதிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆள்மாறாட்டம் செய்த பி.வா.சா.ஆ.2 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் பதிவு செய்யப்படும்போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது எனக்கு வயது என்ன இருக்கும் என்றால் 30. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் பத்திர எழுத்தர் அவர் பெயர் ஞாபகமில்லை. பத்திர எழுத்தரின் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் அப்போது கேணிக்கரையில் இருந்தது. பி.வா.சா.ஆ.2 உயிலை எழுதியவரின் அலுவலகம் கேணிக்கரையிலும் இல்லை, வெளிப்பட்டினத்திலும் இல்லை இராமநாதபுரம் வடக்குத்தெருவில் இருந்தது என்றால் இருக்கலாம். சாட்சி கையெழுத்து போட்டவர்களை யார் அழைத்து வந்தது என்றால் என் அத்தை காமாட்சி அம்மாள்தான். நானோ, பூமயிலோ சாட்சிகளை அழைத்து வந்தோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதிக்கொடுத்த காலத்தில் காமாட்சி அம்மாள் படுத்த படுக்கையாக இருந்து வந்ததால் அவர் சாட்சிகளை அழைத்து வந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆவண எழுத்தருக்கு காமாட்சி அம்மாள் விவரம் கூறி உயில் எழுதப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் தயாரித்தபோது காமாட்சி அம்மாள் ஏற்கனவே 02.08.1952ம் தேதி அவரது மகனான வேலுச்சாமி, மகளான பூமயில் ஆகிய இருவருக்கும் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதி வைத்திருப்பதாகவோ, அதனையும் ரத்து செய்யப்பட்டதாகவோ காமாட்சி அம்மாளால் சொல்லப்பட்டதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 உயில் சாசனம் எழுதப்பட்ட காலத்தில் நானும் சென்றிருந்ததாகவும், என் முன்னிலையில் எழுதப்பட்டதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பூமயில் இறந்துவிட்டாரா என்றால் இறந்துவிட்டார், எப்போது இறந்தார் என்றால் 10 வருடங்கள் இருக்கும். பூமயிலுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 7 பிள்ளைகள். பூமயில் அம்மாள் அவருக்கு சேரவேண்டிய பங்கு சொத்தில் பாதி பங்கு சொத்தை எனக்கும், எனது மக்களுக்கும்

பி.வா.சா.ஆ.3 உயில் மூலம் பாத்தியப்படுத்தியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. பூமயிலுக்கு 7 பிள்ளைகள் உள்ளநிலையில் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் எழுதி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால், அவரது பிள்ளைகள் கவனிக்கவில்லை என்பதாலும், நான் கவனித்ததாலும் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் எழுதிவைத்தார். பூமயிலும், அவரது சகோதரர் வேலுச்சாமியும் சேர்ந்து அவரது தாயாருக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்தில் சர்வே எண்.244/1சி–ல் கண்ட சொத்திளை 02.06.1999 தேதியிட்ட கிரையப்பத்திரப்படி மூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் காமாட்சி அம்மாள் உயிர் சாசனம் எழுதி வைக்காததால்தான் அவரது மக்கள் இருவரும் சேர்ந்து அவ்வாறாக ஒரு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிகள் கோரியவாறு பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் மோசடியாக உற்பத்தி செய்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் பட்டாமாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்வேலுச்சாமியின் சட்டப்படியான மனைவி அல்ல என்பதால் அந்த ஆவணங்கள் மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் கோரியவாறு அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.